காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு - 2019

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படைப் பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் மீது கணக்காய்வாளரின் அறிக்கையினை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயம் தெரிவிப்பதனை மறுப்பதற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை

| உரிய பிரமாணங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கான பிழைகளானது சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்கு தொகுதியில் ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை மீண்டும் வெளிப்படுத்துவதன் மூலம் கடந்த காலத்திற்குப் பொருத்தமான வகையில் செம்மையாக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்களாக ரூபா 53,929,664 தொகை தனியாக செம்மையாக்கப்பட்டிருந்தும் முன்னைய ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் ஒப்பீட்டு ரீதியான பெறுமதியில் திருத்தம் செய்யப்பட்ட பெறுமதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2020 ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு முன்னைய ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களானது ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளுடன் தனியாகச் சுட்டிக் காட்டுவதற்காக தேவையான நடவடிக்கைகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 இற்கு முரணாக மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சலுக்கு தாக்கத்தை ஏற்படுத்தாத ரூபா 53,929,664 தொகையான முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கள், காசுப் பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருந்தது. | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் முன்னைய ஆண்டிற்கான கணக்கீட்டு செம்மையாக்கல்களின் காரணமாக 2018 திசெம்பர் 31 உள்ளவாறு காணப்பட்ட திரண்ட ஒதுக்கமானது ரூபா 1,341,036,849 பணம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,287,107,185 வரை குறைவடைந்ததன் காரணமாக அக்குறைவடைதலான ரூபா 53,929,664 திரண்ட ஒதுக்கத்தின் குறைவினை காசு மற்றும் காசுக்குச் சமமான குறைவுகளாகக் கருதி 2019 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சலில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நியமத்தில் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்துகின்ற தரப்பினர்களுக்கு சரியான தகவல்கள் கிடைக்கும் வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் தயாரிப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை பதிவேட்டில் காட்டப்படுகின்ற 21 குத்தகை தாரர்களிடமிருந்து மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 5,814,278 ஆக இருந்தும் மீளாய்வாண்டில் இறுதியில் கிடைக்க வேண்டிய குத்தகைப் பணம் ரூபா 14,829,675 ஆக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. கிடைக்க வேண்டிய ஆரம்ப நிலுவைக் குத்தகைப் பணம் இல்லாது இக்குத்தகைதாரரிடமிருந்து கிடைக்க வேண்டிய பணம் இவ்வாறு ரூபா 9,015,397 வித்தியாசத்துடனான ரூபா 14,829,675 தொகையினை நிதிக்கூற்றுக்களில் | 2018-12-31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய குத்தகை வருமானத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தும் 2019 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட குத்தகை கோவைகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் இப்பதிவேட்டில் காட்டப்படுகின்றது. இதன் போது ஆண்டிற்கான குத்தகை வாடகை மற்றும் 2019-12-31 இல் உள்ளவாறான கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை காட்டப்பட்டுள்ளது. இதில் வித்தியாசமாகக் காட்டப்பட்டதானது | நிதிக்கூற்றுக்களின் மூலம் சரியான தகவல்களை வெளிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டுவதற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019-01-01 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்க வேண்டிய நிலுவை மீதிக்குரிய செம்மையாக்கல் என தயவாகத் தெரிவிக்கின்றேன் | |
| (ஆ) | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு பொறுப்பேற்றுக் கொண்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பணத்தில் ஆண்டின் போது செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பணம் ரூபா 760,309 ஆக இருந்தும் அது பிழையாக ரூபா 1,493,347 என இழப்பீட்டு நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக இழப்பீட்டு நிதியக் கணக்கு ரூபா 733,038 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே காசுப் பாய்ச்சல் கூற்றில் இழப்பீட்டுக் கொடுப்பனவும் ரூபா 733,038 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் இழப்பீட்டுப் பணத்தின் கீழ் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 733,038 பணம் 2020-12-31 ஆந் திகதியில் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்து கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | கணக்கீட்டுத் தவறுகளை சரிசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | குடியிருப்பாளர்களின் காணிகளை அளவீடு செய்து வரையறுத்துக் கொள்ளுகின்ற சந்தர்ப்பத்தில் மீளளிப்புச் செய்தலின் கீழ் 100 காணித் துண்டுகளுக்காக நில அளவையாளர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 28,364,819 பணத்தில் காணிகளைச் சுற்றி அளவீடு செய்வதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 2,139,169 பணம் ஒரு செலவாக விரிவான வருமானக் கூற்றில் உள்ளடக்கப் பட்டிருந்தமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை அந்த அளவால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020-12-31 ஆந் திகதியில் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (ஈ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கி திறைசேரி உண்டியல்களின் முதலீட்டு மீதியான ரூபா 29,377,805 பெறுமதிக்குப் பதிலாக 2020 சனவரி 31 ஆந் திகதி நடைபெற்ற முதலீட்டுப் பெறுமதியான ரூபா 29,988,457 தொகையினை நிதி நிலைமைக் கூற்றில் காட்டியதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூபா 610,652 அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்கான திறைசேரி உண்டியலின் வட்டி வருமானம் ரூபா 565,442 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகையும் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை வங்கி திறைசேரி உண்டியல்களின் முதலீட்டு மீதியை நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரும் போது தவறுகள் இடம்பெற்றிருந்தமை பின்னர் அடையாளம் காணப்பட்டிருந்தது. தற்பொழுது அப்பெறுமதி சரி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கின்றேன். | மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 1972 ஆம் ஆண்டில் ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்ட திகதியிலிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக அக்காணிகளின் ஏக்கர் அளவு, ஒவ்வொரு காணியும் அமைந்துள்ள பிரதேசம், சுவீகரிக்கப்பட்டது யாரிடமிருந்து, தற்பொழுது பயன்படுத்துவதற்கு ஒப்படைத்தல் என்பன தொடர்பான விபரம் மற்றும் உரிய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் காணிகளில் அத்துமீறிக் குடியிருத்தல்களுக்குரிய அனைத்து விபரங்கள் தொடர்பான முழுமையான விபரங்களையும் உள்ளடக்கிய ஒரு பதிவேடு நிறுவனத்தினால் பேணப்பட்டிருக்காததுடன் அது | நாளதுவரையாக்கப்பட்ட காணிகள் பதிவேடு இல்லாமையின் காரணமாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு தற்பொழுது சொந்தமாகவுள்ள காணிகளின் நாளதுவரையாக்கப்பட்ட பெறுமதியைத் தெரிந்து கொள்வது சிக்கலாக உள்ளது. தற்பொழுது காணிப் பதிவேட்டினை நாளதுவரையாக்குவது தொடர்பான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நாளதுவரையாக்கப் பட்ட காணிப் பதிவேட்டினை பராமரிக்காமை சம்பந்தமாக அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர் களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

தொடர்பாக துணை ஆவணங்களின் மூலம் விளக்கமளிப்பதற்கும் நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 676,169,345 தொகையான பொறுப்பேற்கப்பட்ட காணிகளின் உள்ளமையையும் மதிப்பீடு செய்தலின் சரியான தன்மையையும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட 7 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,135 மில்லியன் கடன் மீதிகள் 10 ஆண்டுகளுக்கும் 30 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும் காணிகளை குத்தகைக்கு வழங்கியமைக்காக 8 நபர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2.3 மில்லியன் 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 10 ஆண்டுகளுக்கும் 30 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக கிடைக்க வேண்டிய வருமானங்களை வழங்குவது சம்பந்தமாக தெரியப்படுத்தும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் அதற்குச் சார்பான பதில் எங்களுக்கு கிடைத்திருக்கவில்லை. இது சம்பந்தமாக காணி அமைச்சின் செயலாளர், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பொதுத் திறைசேரியின் தலையீட்டில் அனைத்து தரப்பினர்களையும் அழைத்து தீர்மானம் எடுக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், 20 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றுள்ள சில நபர்கள் பணம் செலுத்தியுள்ளமை மாவட்ட அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள சில கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக தலைமை அலுவலகத்தில் | மேற்கூறிய கிடைக்க வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தகவல்களை தேடிப்பார்ப்பதற்கு முடியாதிருந்ததுடன் பணிப்பாளர், நிதி அவர்களுக்கு இப்பணத்தை விரைவாக அறவிட்டுக் கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

**1.6.2 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) காணி குத்தகைப் பணங்கள் முற்பணமாக 270 குத்தகைதாரர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,080,850 தொகை காணி குத்தகை முற்பண மீதிகளில் ரூபா 10,225,000 தொகை 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 1,115,850 தொகை 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், உத்தேச காணிகளை சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு அல்லது முற்பணங்களை மீளச் செலுத்தி பொறுப்புக்களிலிருந்து விடுபடுவதற்கு ஆணைக்குழுவால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2002-2004 காலத்தில் அமைச்சரவையின் மூலம் தடை செய்யப்பட்ட இக்காணி கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான குத்தகைப் பணத்தை வைப்புச் செய்திருந்த நிறுவனங்கள் மற்றும் நபர்களினால் மீண்டும் செய்யப்பட்டிருந்த வேண்டுதல்களின் பிரகாரம் ஆணைக்குழுவின் மூலம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அதன் போது அமைச்சரவையினால் தடை செய்யப்பட்ட இக்காணிக் கொடுக்கல் வாங்கல்களுக்குரிய காணிகளை மீண்டும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயிருந்தால் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.<br><br>2002-2004 காலப்பகுதியில் காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக அறவிடப்பட்ட முற்பணங்களானது | குத்தகை வாடகைக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காணிகள் தொடர்பாக தேடிப்பார்த்து மேற்கூறிய காணிகளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் மேலும் பொறுப்புக்கள் அற்ற மீதிகளை வருமானத்திற்கு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இக்காணிச் சிக்கலினை தீர்த்து வைக்காமையின் அடிப்படையில் மேலும் குத்தகை முற்பணமாக கணக்குகளில் சுட்டிக் காட்டப்பட்டது. | |
| (ஆ) | தோட்ட கம்பனிகளிடமிருந்து பொறுப்பேற்கப்பட்ட காணிகளுக்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டுக் கணக்கின் 2005 ஆம் ஆண்டிலிருந்து 14 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 109,959,493 தொகையான அசைவற்ற மீதியும் காணி விற்பனை முற்பணக் கணக்கின் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 10,387,992 மீதியும் தீர்த்து வைக்கப்படாது முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | தற்பொழுது செலுத்தப்படுகின்ற இழப்பீட்டுக் கொடுப்பனவானது இழப்பீட்டு தொங்கல் கட்டம் 01 கணக்கின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் இழப்பீட்டு தொங்கல் கட்டம் இலக்கம் 02, தங்கப் பவுண் தோட்ட கம்பனிக்கான இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு ஈடுபடுத்தப்படுகின்றது. அதற்கிணங்க அண்மைக்காலத்தில் இழப்பீட்டு தொங்கல் 02 கணக்கின் மூலம் எதுவித இழப்பீட்டினையும் செலுத்துதல் இடம்பெறவில்லை.<br><br>காணி விற்பனை முற்பணக் கணக்கில் உள்ள மீதியை தீர்த்து வைப்பதற்காக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பி வைத்து அந்த அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அவ்வாறே காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு குடியிருப்பதற்காக வழங்கப்படுகின்ற காணிகளுக்காக அறவிடப்படுகின்ற பணமும் இக்காணி விற்பனை முற்பணக் கணக்கில் | இழப்பீடு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட காணிகளின் ஏக்கர் அளவு, அமைவிடம், தொடக்க உரிமையாளர் என்பன தொடர்பான விபரத்தை தேடிப் பார்த்து இழப்பீட்டினைச் செலுத்துவதற்கும் காணிகளின் உரிமையைத் தீர்த்து வைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்படுகின்ற காணித் துண்டுகளின் அளவுக்கு இணங்க இம்முற்பணக் கணக்கிலிருந்து கழித்தல் இடம்பெறுகின்றது. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 101 இலிருந்து நி.பி 104 வரை | கேகாலை மாவட்டத்திலுள்ள களணி வெலி கம்பனிக்கு பயன்படுத்துகின்ற உரிமை ஒப்படைக்கப்பட்டுள்ள காணிக்கு ஒரு சச்சரவு வழக்கு இருக்கையில் அதனைக் கருத்தில் கொள்ளாது ஆணைக்குழுவிற்கு போலியான குறைந்த வருமான உறுதி வழங்கிய மையின் காரணமாக ரூபா 1,371,750 பணம் ஆணைக் குழுவினால் நீதிமன்ற த்திற்குத் செலுத்தியதனால் இடம்பெற்ற நிதிசார்ந்த நட்டம் பிரமாணங்களின் பிரகாரம் பொறுப்புக்கூறக் கூடிய நபர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்க வில்லை. | இதற்காக பொறுப்புக்கூற கூடிய நபர்கள் யார் என்பதனைத் தேடிப் பார்ப்பதற்காக புலனாய்வினை எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த புலனாய்வு அறிக்கை கிடைத்ததன் பின்னர் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பித்து ஆணைக்குழுத் தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விசாரணைகள் மேற்கொண்டு பொறுப்புக்கூறக் கூடிய நபர்களிடமிருந்து இடம்பெற்றுள்ள நட்டத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் VII ஆம் | பதிற்கடமை அடிப்படையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு தமது நிரந்தர பதவியின் சம்பளம் மற்றும் | பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு பதிற்கடமை படி மற்றும் ஏனைய படிகளைச் | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகத்தர் களுக்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயத்தின் 12 ஆம் பந்தியின் 12:5:4 மற்றும் 12:7 ஆம் பிரிவுகள் | படிகளுக்கு மேலதிகமாக செலுத்த வேண்டிய பணம் பதிற்கடமை பதவியின் ஆரம்பச் சம்பளத்தில் 25 சதவீத உச்ச அளவினை மிகைக்காதிருக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக சபையின் பணிப்பாளர் நாயகமாக பதிற் கடமையாற்றிய உத்தியோகத்தர் 2019 செப்தெம்பரிலிருந்து 2020 மே வரை பதிற்கடமை படிக்கு மேலதிகமாக தொலைபேசி, வீட்டு வாடகை, எரிபொருள் மற்றும் உபசரிப்பு படியாக ரூபா 700,350 பெற்றுக் கொண்டிருந்தார். | செலுத்துவது சம்பந்தமாக அமைச்சு செயலாளரிடம் விசாரிக்கப்பட்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் உரிய படிகளைச் செலுத்துவதற்காக 2019-11-07 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதுவரை ஆணைக்குழு அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பணிப்பாளர் நாயக பதவிக்காக கொடுப்பனவு செய்யப்பட்ட உத்தியோகபூர்வ இல்லப்படி மற்றும் உபசரிப்பு படியும் பணிப்பாளர் நாயகமாக பதிற்கடமையாற்றுகின்ற உத்தியோகத்தருக்கு கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் PED 12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | அரசாங்க தொழில் முயற்சிகளின் மிகைப் பணத்தை முதலீடு செய்வதற்கு நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 1,919,478,424 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. | உரிய ஆவணங்களுடன் தேவையான அங்கீகாரத்திற்காக பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு பின் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய அங்கீகாரத்தினை வழங்குதல் அல்லது வழங்காமை சம்பந்தமாக எதுவித எழுத்துமூல தெரிவித்தலும் எங்களுக்கு கிடைத்திருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் முதலீடு செய்வதற்கு முன்னர் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | 2015 யூன் 17 ஆந்திகதிய PED/3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவின் தலைவருக்கும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கும் வீட்டு வாடகைப் படி மற்றும் | 2017-07-27 ஆந் திகதி நடைபெற்ற ஆணைக்குழு கூட்டத்தினால் தலைவருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 25,000 தொகையும் பணிப்பாளர் | சுற்றறிக்கையின் பிரகாரமும் நிர்ணயிக்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையிலும் மாத்திரம் உரிய கொடுப்பனவை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உபசரிப்பு படியினைப் பெற்றுக் கொள்வதற்கு தகமை இல்லாத போதிலும் சுற்றறிக்கைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,100,000 தொகையான வீட்டு வாடகை படி மற்றும் உபசரிப்பு படி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | நாயகத்திற்கும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கும் ஒரு மாதத்திற்கு ரூபா 15,000 தொகையுமாக உபசரிப்பு படியினைச் செலுத்துவதற்கு வழங்கிய அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு உரிய படியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், இக் கொடுப்பனவுகள் செலுத்துவது தொடர்பில் தேசிய சம்பளம் மற்றும் சேவையாளர் எண்ணிக்கை சபைக்கு அறிவிப்பதற்காக 2020.06.26 ஆம் திகதி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய ஆணைக்குழு தீர்மானம் (பத்திரிகை இலக்கம் 9676) | கருங்கல் காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது ஒரு ஆண்டு காலத்திற்கு அதிகாரம் அளிக்கும் வகையில் குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட வேண்டும் எனவும் அது மத்திய அதிகாரசபை மற்றும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம் ஆகிய நிறுவனங்களின் சிபார்சின் அடிப்படையில் செய்யப்பட வேண்டிய போதிலும் மேற்கூறிய நிறுவனங்களின் சிபார்சு மற்றும் எழுத்து மூல குத்தகை உடன்படிக்கை இல்லாது கருங்கல் காணிகள் வழங்கப்பட்டிருந்தன. | வருடாந்த அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு சில தாமதங்கள் ஏற்பட்டுள்ளதுடன் தயாரிக்கப்பட்ட வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழக்கறிஞர்கள் சபையின் கவனத்திற்கு அனுப்பி ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அடுத்துவரும் ஆணைக்குழு கூட்டத்தில் அங்கீகாரத்தினைப் பெற்று கருங்கற்களை உடைத்து அகற்றும் உடன்படிக்கை அமுல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கின்றேன். | உரிய நிறுவனங்களின் சிபார்சினைப் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொண்டதன் பின்னர் கருங்கல் காணிகளை குத்தகைக்கு வழங்குதல் வேண்டும். அறவிடப்படுகின்ற அரசிறை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான தெரிவுக் குழுவின் சிபார்சு | காணிகளை முறைப்படியாக பட்டியல்படுத்தல், ஆவணங்களிலுள்ள குறைபாடுகளின் காரணமாக அமைச்சின் நேரடி தலையீட்டின் அடிப்படையில் இனங்காணப்பட்ட கடன்பட்டோர் மீதிகளைப் பதிவழித்தல், முதலீட்டினைப் பேணுவதற்கான அங்கீகாரம் மற்றும் மொன்றகெலேவத்தையின் 280 ஏக்கர் காணிகளை வழங்கி அக்குத்தகைப் பணம் அறவீடு செய்யப்படாமை முதலிய விடயங்கள் சம்பந்தமாக பொதுமுயற்சிகள் தொடர்பான தெரிவுக் குழுவினால் வழங்கப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | • காணிப் பதிவேட்டினைத் தயாரித்தலை மூன்று கட்டங்களில் முடிவுறுத்துவதற்கு தற்பொழுது ஆரம்பிக்கப் பட்டுள்ளது.<br><br>• ரூபா 02 பில்லியன் தொகையான கடன் பட்டோர் மீதி சம்பந்தமாக எதிர்காலத்தில் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது.<br><br>• முதலீட்டினைப் பேணுவதற்கு அங்கீகாரத்தினை வழங்குதல் அல்லது வழங்காமை சம்பந்தமாக எதுவித எழுத்துமூல தெரிவித்தலும் எங்களுக்கு கிடைத்திருக்க வில்லை.<br><br>• மொனரகெலேவத்த காணியில் 280 ஏக்கர் அளவானவை வேல்ட் வீவ் இம்பெக்ட் தனியார் கம்பனிக்கு 30 ஆண்டுகள் காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அவர்களினால் குத்தகை முற்பணமாக ரூபா 1,000,000 பணம் ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டுள்ள துடன் மேற்கூறிய கம்பனி தற்பொழுது பயன்படுத்துவதனை கைவிட்டுள்ளது. அக்கம்பனி காணியில் இறப்பர் | பொது முயற்சிகள் தொடர்பான தெரிவுக் குழுவின் சிபார்சினை விரைவாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சிபார்சுகளை அமுல்படுத்தும் செயல் முன்னேற்றத்தை தெரிவுக்குழுவிற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் அறிக்கையிடுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பயிரிட்டு 05 ஏக்கர்கள் அளவில் அபிவிருத்தி செய்துள்ளது. தற்பொழுது இக்காணியும் மாகல சரணாலயத்திற்கு வனபரிபாலனத் திணைக்களத்தின் வேண்டுகோளின் பிரகாரம் நில அளவையாளர் திணைக்களத்தினால் அளவீட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,291,127 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 121,635,246 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 120,344,119 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு புதிய ஆட்சேர்ப்புக்களின் காரணமாக பதவியணியினர் சம்பளங்கள் அதிகரித்தல் மற்றும் ஓய்வூதிய பணிக்கொடையினைத் திருத்தம் செய்தல் என்பன பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) பதுளை மாவட்டத்தில் சிறீ காளி அம்மன் கோவிலுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 04 ஏக்கர் 02 ரூட் அளவான காணிக்கு 31 ஆண்டுகளுக்கு அதிகாரமின்றி பயன்படுத்துவதற்குரிய பயன்படுத்துதல் கட்டணம் மற்றும் 2009 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய குத்தகைப் பணத்தை உள்ளடக்கிய ரூபா 3,817,066 பணமும் கேகாலை மாவட்டத்தில் குத்தகை உடன்படிக்கையினை மேற்கொள்ளாது பிரீதிபுர சிறுவர் இல்லத்திற்கு குத்தகைக்கு | சிறீ காளி அம்மன் கோவிலுக்கு குத்தகைப் பணத்தை செலுத்துமாறு பல சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்தியிருந்தும் குத்தகைப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. சமய நிறுவனம் எனக் கருதி நியாயமான நடைமுறையில் வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. பயன்படுத்துவதற்கான பணத்தை அறவீடு | நிறுவனத்தின் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க காணிகளை குத்தகைக்கு வழங்குதல், உடன்படிக்கை செய்து கொள்ளல், குத்தகையை அறவீடு செய்தல் மற்றும் குத்தகையை செலுத்தாதவர்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்த 75 ஏக்கர்களுக்கு அறவிட வேண்டிய ரூபா 3,141,521 பணத்தையும் அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செய்யும் போது அவ்வாறான சலுகை நடைமுறை பின்பற்றப்படுகின்றதா என்பதனை ஆணைக்குழுவிடம் விசாரித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதாக தயவாகத் தெரிவித்துக் கொள்கின்றேன். பிரீதிபுர, சிறுவர் இல்லம் 2019-12-10 ஆந் திகதியில் 30 ஆண்டுகள் குத்தகை காலம் முடிவடைந்திருந்தும் முன்னைய குத்தகை காலப் பணம் செலுத்தப்பட்டு இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2018 ஆம் ஆண்டு வரை இக்குத்தகைப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. குத்தகைப் பணம் மற்றும் உடன்படிக்கையை திருத்தம் செய்தல் தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்டது. பிரீதிபுரம் சிறுவர் இல்லத்தின் நிருவாக உத்தியோகத்தரை 2020-09-09 ஆந் திகதி தலைமை அலுவலகத்திற்கு அழைத்து கலந்துரை யாடப்பட்டதுடன் 2009 இலிருந்து புதிய குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் மற்றும் புதிய மதிப்பீட்டிற்கு இணங்க தீர்மானிக்கப்படுகின்ற வருடாந்த குத்தகைப் பணத்திற்கு இணங்கிய குத்தகையை அடிப்படையாகக் கொண்டு வழங்குவதற்காக அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2002 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை ஆணைக்குழுவானது செயற்திட்டங்களுக்காக காணிகளை குத்தகைக்கு வழங்கும் நடைமுறைகளுக்கு முரணாக காணிகளை பயன்படுத்துவதற்கான உரிமையை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததன் காரணமாக 2004 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அவ்வாறு குத்தகைக்கு வழங்குதல் தடை செய்யப்பட்டிருந்தது. இக்காணிகளை பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்டவைகள் மற்றும் பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்படாதவைகளாக தனித்தனியாக இனங்கண்டு பதிவேட்டிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட காணிகளாக கணக்காய்வு இனங்கண்ட 760 ஏக்கர் 31 பேர்ச்சர்ஸ் காணிகள் மீண்டும் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. பயன்படுத்துவதற்கு 1689 ஏக்கர்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களை அந்த வேண்டுதல் விடுத்தவர்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் இக்காணிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2002 சனவரி மாதத்திலிருந்து 2004-03-31 ஆந் திகதி வரை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் செயற்திட்டத்திற்காக காணிகளை குத்தகைக்கு வழங்கும் நடைமுறைக்கு முரணாகச் செய்யப்பட்ட காணி ஒப்படைப்புக்கள் 2004 ஆம் ஆண்டின் போது அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அந்த குத்தகைக்கு வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்படாத காணிகள் தொடர்பான பதிவேட்டினைத் தயாரித்தல் தற்பொழுது அனைத்து மாவட்ட அலுவலகங்களிலிருந்தும் உரிய காணி சம்பந்தமாக அறிக்கை கோரப்பட்டுள்ளது. அந்த அறிக்கையினை கொண்டு காணிகள் வகைப்படுத்தப்பட்டு அந்த வகைப்படுத்தலின் பிரகாரம் ஆணைக்குழு பத்திரிகையைத் தயாரித்து அடுத்துவரும் ஆணைக்குழு கூட்டத்தின் போது அதனை அங்கீகரிக்கச் செய்து இக்காணி சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுத்தல் இடம்பெறும் என தெரிவிக்கின்றேன். | பயன்படுத்துவதற்கு ஒப்படைக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்படாத காணிகள் தொடர்பாக ஒரு பதிவேடு பேணப்பட வேண்டியதுடன் அக்காணிகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அக்காணிகளின் உரிமையை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | குத்தகை உடன்படிக்கை மேற்கொள்ளாது ஹோமாகம பிரதேசத்தில் லேலன்ட் தோட்டத்தில் 6 ஏக்கர் அளவான காணித் துண்டும் | குத்தகை உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னர் இந்த நிறுவனத்தினால் திருத்தங்களின்றி உரிய | காணப்படுகின்ற நடைமுறைகளுக்கு இணங்க உடன்படிக்கை செய்து |

| | | | |
|---|---|---|---|
| | டெம்பல்பேர்க் தோட்டத்தின் 80 பேச்சர்ஸ் காணியும் முறையே 2005 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளின் போது இரண்டு தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்காக தற்போதைய மதிப்பீட்டில் 6 சதவீதத்தை அறவீடு செய்தல் ஆணைக்குழுவின் வழக்கமான நடைமுறையாக இருந்த போதிலும் 4 சதவீதப்படி அறவீடு செய்தலின் காரணமாக முறையே ரூபா 17,200,000 மற்றும் ரூபா 400,000 தொகைகளான வருமானம் ஆணைக்குழுவினால் இழக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 11,203,288 மற்றும் ரூபா 2,940,581 குத்தகைப் பணங்களும் ஆணைக்குழுவிற்கு இதுவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | குத்தகைப் பணம் செலுத்தப்பட்டுள்ளதனால் குத்தகை உடன்படிக்கையைத் தயாரித்தல் சம்பந்தமாக உள்ள சட்டக் குழுவிற்கு அனுப்பி ஆலாசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அது கிடைத்த உடன் உரிய குத்தகை உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு அனுப்பி வைத்துள்ளேன்.<br><br>எவ்வாறாயினும், நிகழ்கால மதிப்பீட்டில் 6% இனை அறவீடு செய்தல் ஆணைக்குழுவின் வழக்கமான நடைமுறையாக இருந்த போதிலும், அரசாங்கத்தின் காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளின் பிரகாரம் தொழிற்சாலைகளைத் தோற்றுவிப்பதற்காக அரசாங்கத்தின் காணிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கும் போது வருடாந்த குத்தகைப் பணம் அறவிடப்பட்டது. மதிப்பீட்டுப் பெறுமதியில் 4% என தொழிற்சாலைகள் அபிவிருத்தி அமைச்சு தெரியப்படுத்தியுள்ளதுடன் அதற்கிணங்க 4% இற்குரிய கணித்தல் இடம்பெற்றுள்ளது என தெரியப்படுத்துகின்றேன். | கொள்வதற்கும் ஆணைக்குழுவின் வழக்கமாக குத்தகைக்கு வழங்கும் நடைமுறையின் பிரகாரம் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காலி மாவட்டத்தில் மஹஹேன்தென்ன வத்த காணியில் 10 ஏக்கர் அளவானவை வீடுகளை நிர்மாணிப்பதற்காக எல்பிடிய இஹல பிரதேசத்திலுள்ள | காலி மாவட்டத்தில் எல்பிடிய இஹல பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளோர்களின் சமூக நலன்புரிச் | வழங்கப்பட்ட முற்பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் |

சமூக நலன்புரிச் சங்கத்திற்கு அமைச்சரவை அங்கீகாரமின்றி வழங்கப்பட்டு காணியின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 10 சதவீத வருடாந்த வட்டிக்கு 6 மாதங்களில் மீளச் செலுத்தும் அடிப்படையில் 2019 மார்ச் மாதம் ரூபா 1,000,000 பணம் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீடமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் இதுவரை அமுல்படுத்தப் பட்டிருக்காததுடன் பணத்தை அல்லது வட்டியை அறவீடு செய்வதற்கு ஆணைக்குழு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

சங்கத்தின் அங்கத்தவர்களின் வேண்டுதல்களுக்கு இணங்க ''என்ட பிரைசஸ்'' இலங்கை கடன் திட்டத்தின் கீழ் காணிகள் மற்றும் வீடுகள் இல்லாத அங்கத்தவர்களுக்காக ஆணைக்குழுவிற்குச் சொந்தமான எல்பிடிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள மஹஹேன் தென்ன எனும் பெயருள்ள காணியின் 10 ஏக்கர்களை செயற்திட்டத்திற்கு வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அப்போது வரை நலன்பெறுநர்கள் தெரிவு செய்யப்படாதிருந்ததனால் அதற்காக செலவு செய்யப்படுகின்ற பணத்தை பின்னர் நலன் பெறுநர்களிடமிருந்து அறவிடும் அடிப்படையில் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் ஆணைக்குழுவினால் செலுத்தப்பட்டது. பின்னர் காணிகள் அளவீடு செய்யப்பட்டு 1501/2019 ஆம் இலக்க திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டது. திட்ட வரைபடத்தை அங்கீகரித்துக் கொள்வதற்காக எல்பிடிய பிரதேச சபையின் மற்றும் தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் அதற்கான அங்கீகாரம் தாமதித்ததன் மூலம் வீடமைப்புச் செயற்திட்டம் அமுல்படுத்தப்படவில்லை. இப்பணத்தை செலுத்துமாறு உரிய சங்கத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் காணித் துண்டுகள்

காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் ஆணைக் குழுவில் காணப்படுகின்ற நடைமுறைகளுக்கு இணங்க வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டுள்ளதாயின் செலுத்த வேண்டிய அனைத்து பணத்தையும் செலுத்துவதற்கு இணங்கி கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. இக்காணி தற்பொழுது ஆணைக்குழுவின் சட்டரீதியான கடப்பாட்டிற்காக ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள துடன் காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்டுள்ள பணத்தை சட்டரீதியான கடப்பாடுகளின் கீழ் காணிகள் வழங்கப்படுகின்ற தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஹந்தான வத்த எனும் பெயருள்ள காணியில் 859 ஏக்கர் 02 ரூட் 09 பேச்சர்ஸ் அளவானவை 1982 ஆம் ஆண்டில் வர்த்தமானியின் மூலம் அதனை முகாமைத்துவம் செய்வதற்காகவும் விவசாய நடவடிக்கைகளுக்காகவும் மாத்திரம் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்கு முரணாக அக்காணியில் 20 ஏக்கர் 2 ரூட் 16 பேச்சர்ஸ் ரூபா 300,000 வருடாந்த குத்தகைப் பணத்திற்கு ஹோட்டல் செயற்திட்டத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 29 ஏக்கர் 10 பேர்ச்சர்ஸ் காணித் துண்டு ரூபா 1,395,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி இரண்டு தனிப்பட்டவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | கொ/765 விசேட இலக்கத்தின் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள ஹந்தான வத்த காணியில் 859 ஏக்கர் 02 ரூட் 09 பேச்சர்ஸ் அளவானவை ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டது. பின்னர் 1982-03-12 ஆந் திகதிய 183/10 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் ஹந்தானவத்த காணியை முகாமைத்துவம் செய்தல் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு ஒப்படைக்கப்பட்டது. எனினும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் இக்காணியில் 20 ஏக்கர் 02 ரூட் 16 பேர்ச்சர்ஸ் அளவானவை ஹோட்டல் செயற்திட்டத்திற்காக குத்தகைக்கு வழங்கியதில் 29 ஏக்கர் 00 ரூட் 10 பேச்சர்ஸ் அளவானவை இரண்டு தனிப்பட்டவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டதுடன் அதற்காக காணி மறுசீரமைப்பு | மேற்கூறிய சட்டவிரோத கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய நோக்கத்திற்காக மாத்திரம் பயன்படுத்தப் படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை எனத் தயவாகத் தெரிவிக்கின்றேன். மேலும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக மாத்திரம் இக்காணி வழங்கப்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கின்றேன். | |
| (ஈ) | உலப்பனை கைத்தொழில் பேட்டையிலுள்ள 5 ஏக்கர் 20 பேர்ச்சர்ஸ் காணி ஒரு தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் இக்காணிக்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து 2019 யூன் வரை ரூபா 1,722,121 குத்தகைப் பணம் அக்கம்பனியிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. அவ்வாறே அக்குத்தகை ஆதனத்தை பிணையாக வைத்து மேற்கூறிய கம்பனி சம்பத் வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்ட கடனை செலுத்தாததன் அடிப்படையில் ஆதனத்தை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது என ஆணைக்குழுவுக்கு 2016 ஏப்ரல் மாதம் தெரியப்படுத்தியிருந்தும் அது சம்பந்தமாக வங்கியுடன் கலந்தாலோசித்து காணியை தீர்த்து வைப்பதற்கும் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கும் ஆணைக்குழு இதுவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்காக குத்தகை அறவிடுவதிலுள்ள சிக்கல் மற்றும் உடன்படிக்கையை தயாரிப்பது தொடர்பாக கலந்தாலோசித்து ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்டுள்ள சட்ட குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அச்சட்ட குழுவினால் உரிய நிறுவனத்திற்கு அழைப்புக் கடிதத்தினை அனுப்புவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அழைப்புக் கடிதம் சட்ட பணிப்பாளரின் ஆலோசனையுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தில் காணப்படுகின்ற முறைமைக்கு இணங்க காணிகளை குத்தகைக்கு வழங்குதல் உடன்படிக்கை செய்து கொள்ளல் குத்தகையை அறவீடு செய்தல் குத்தகை செலுத்தாதவர்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் காணிகளின் உரிமையை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 சச்சரவுத்தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) உலபனை கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள 4 நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 4 ரூட் காணிக்காக குத்தகை உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2008 ஆம் ஆண்டிலிருந்து அறவிட வேண்டிய குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. குத்தகை உடன்படிக்கை இல்லாததனால் அறவிட வேண்டிய பணத்தை கணக்கீடு செய்வதற்கும் முடியாதிருந்தது. | இக்காணித்துண்டின் எல்லைகள் மாற்றமடைந்ததன் அடிப்படையில் சில சிக்கலான நிலைமை உருவாகியதனால் மீண்டுத் உரிய கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள காணியை மீண்டும் அளவீடு செய்து புதிய திட்டவரைபடத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் தாமதமடைந்துள்ளது. அத்திட்ட வரைபடத்தைப் பயன்படுத்தி ஆணைக்குழுப் பத்திரத்தினை தயாரித்தல், அரசாங்க மதிப்பீட்டாளரினை அழைத்தல் ஆகிய நடவடிக்கைகள் குத்தகை உடன்படிக்கையைத் தயாரிப்பதற்கு தேவையான விடயம் என்பதனால் அத்தீர்மானத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. எனினும், திட்ட வரைபடத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டு 2019-10-07 ஆந் திகதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மதிப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளுதல் ஊழளனை-19 தொற்று நோயின் காரணமாக தாமதமடைந்துள்ளது. | நிறுவனத்தில் காணப்படுகின்ற நடைமுறைகளின் பிரகாரம் காணிகளை குத்தகைக்கு வழங்குதல், உடன்படிக்கை செய்து கொள்ளல், குத்தகை அறவிடல், மற்றும் குத்தகை செலுத்தாதவர்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) ஆணைக்குழுவின் காணிகளை அளவீடு செய்து முறைப்படியாக்குகின்ற சந்தர்ப்பத்தில் மீளளிப்புச் | காலி மாவட்டத்தில் விசேட உறுதி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அளவீடு செய்யப்பட்டுள்ள | காணி வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நில அளவை செய்து மீளளிப்புச் செய்யாது இவ்வாறு |

செய்வதற்கு உட்பட்டு காணிகளை நில அளவை செய்திருந்த அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களுக்கு ரூபா 28,364,819 செலுத்தப்பட்டிருந்தது. நிறுவனத்தில் துரித உறுதி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 2,886,048 மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மிகுதிப் பணத்தை ஆணைக்குழுவிற்கு மீளளிப்புச் செய்வதற்கு 30 ஆண்டுகள் அளவான காலம் எடுத்துள்ளது எனவும் உறுதி வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணிகளை அளவீடு செய்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்குமாயிருந்தால் இவ்வாறான அதிக அளவான பணம் நிறுவனத்தினால் மேற்கொள்ள வேண்டியிருக்காது என்பதுவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

திட்ட வரைபடங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒழுங்குபடுத்தக் கூடிய அனைத்து தரப்பினர்களிடமிருந்தும் அடிப்படையாக நில அளவைக் கட்டணத்தை அறவீடு செய்யுமாறு மாவட்ட அலுவலகத்திற்கு தற்பொழுது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

செலவு செய்வதன் மூலம் ஆணைக்குழுவிற்கு விசேட நலன் வழங்கப்பட்டிருக்காததனால் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களானது மிகவும் கவனத்தோடு மேற்கொள்ளப் படுதல் வேண்டும்.